# ரம்பேவ பிரதேச சபை
# அநுராதபுர மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மே 02 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஏப்ரல் 04 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ரம்பேவ பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் அதன் மூலம் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்பட்டிருந்த தாக்கம் தொடர்பான பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| | குறைபாடுகளின் தன்மை | விடயங்களின் எண்ணிக்கை | நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | வருமானம் | செலவினம் | பொறுப்புக்கள் | சொத்துக்கள் |
| | | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (அ) | நிதிக்கூற்றுகளில் அதிகரித்துக் காட்டுதல்கள் | 01 | 85 | - | - | - |
| (ஆ) | நிதிக்கூற்றுகளிலிருந்து விடுபட்டவைகள் | 01 | - | - | - | 15 |
| | - மேற்படி - | 02 | - | | 129 | - |
| | - மேற்படி - | 01 | 07 | - | - | - |
| | - மேற்படி - | 01 | - | 19 | - | - |
| (இ) | பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள் | 04 | - | - | - | 2,374 |
| | | 03 | - | - | 1,318 | - |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 05 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 20,898,288 ஆக இருந்ததுடன், பட்டோலைகள்/அறிக்கைகளின் பிரகாரம் அம்மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,220,703 ஆக இருந்தது.

### 1.3.3 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 341,970 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 433,738 கூட்டுத்தொகையான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த / மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

### 1.3.5 இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவை | |
| (i) விதி 180 | சபையில் பதில் கடமையாற்றும் செயலாளரினால் பிணை வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி 194 | ஒவ்வொரு சொத்துக்களும் பி.ச.45 இன் பிரகாரம் களஞ்சியப் பொருட்பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| நி.பி 571 | 2007 ஆம் ஆண்டில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 358,413 ஆன வைப்புக்கள் வருமானத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்க வில்லை. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,022,253 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,544,356 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்ட | உள்ளவா றான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (அ) | வீதவரியும் வரியும் | 320 | 166 | 255 | 220 | 140 | 215 |
| (ஆ) | வாடகை | 1,109 | 701 | 221 | 1,018 | 647 | 24 |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 600 | 868 | 202 | 600 | 729 | 125 |
| (ஈ) | ஏனைய வருமானம் | 200 | 0 | 324 | 850 | 18 | 981 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றமொன்றில் 2010 திசம்பர் 31 வரை அறவிடப்பட்டு பிரதம செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 98,166 தண்டப்பணம் சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.3 அபிவிருத்தி செய்யப்படாத காணிக்கான வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 153(i) ஆவது பிரிவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள அபிவிருத்தி செய்யப்படாத காணிகளின் மூலதன நிலப்பெறுமதியின் 2% ஆன வருடாந்த வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 870,800 தொகை முத்திரைக் கட்டணங்களாகக் கிடைக்கவேண்டியிருந்தது.

### 2.2.5 நிலுவை வாடகை

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஐந்தொகையில் நிலுவை வாடகையாகக் காணப்படுகின்ற ரூபா 220,700 தொகையில் ரூபா 104,450 ஆனது 2006 ஆம் ஆண்டிற்குரிய நிலுவை மீதியாக இருந்ததுடன் எஞ்சிய ரூபா 116,250 ஆனது 2009 ஆம் ஆண்டிற்குரிய நிலுவை மீதியாகும்.

### 2.2.6 கடை வாடகை

உள்ளூராட்சி ஆணையாளரின் 1994 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய என்சீபீ/கே.ஜீ/9/7/19 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம் பிரதான மதிப்பீட்டாளர் அல்லது உள்ளூராட்சி சேவைக்குரிய மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் மாதாந்த கடை வாடகை தீர்மானிக்கப்பட வேண்டியிருந்ததுடன் 05 வருடங்களுக்கு ஒரு முறையாவது மதிப்பீட்டு வாடகை திருத்தம் செய்ய வேண்டியிருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான கடையின் வாடகைகள் 10 வருடங்களுக்கு முன் பெற்ற தீர்மானத்தின் அடிப்படையில் வேறுபாடின்றி காணப்பட்டது.

### 2.2.7 ஆதன வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிலுவை ஆதனவரியை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படாமையினால் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 255,410 ஆன நிலுவை ஆதனவரி மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் ரூபா 121,250 தொகை அதாவது 47% ஆனது 05 வருடங்களையும் விட பழைய மீதியாக இருந்தது.

### 2.2.8 அனுமதிப்பத்திரக் கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள ஏதாவது நிலையமொன்றில் பொருட்கள் அல்லது சேவைகளின் உற்பத்தி, வியாபாரம் அல்லது விநியோகங்கள் போன்றவைகளில் ஈடுபடும் ஏதாவது வாடகையாளர் ஒருவருக்கான அனுமதி பிரதேச சபையினால் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 147

ஆவது பிரிவின் கீழ் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றிருந்தால் மாத்திரமே முடியுமாகும். 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அவ்வாறான செயற்பாடுகளுக்காக நிலையங்களைப் பயன்படுத்துகின்ற 65 பேரிடமிருந்தும் அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா 118,250 அறவிட வேண்டியிருந்தது.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு செய்யப்பட்டது | உள்ளவாறான | முரண் | பாதீடு செய்யப்பட்டது | உள்ளவாறான | முரண் |
| **மீண்டுவரும் செலவினம்** | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| ஆளணி வேதனம் | 6,500 | 6,326 | 174 | 7,817 | 6,402 | 1,415 |
| ஏனையவை | 2,200 | 2,170 | 30 | 3,248 | 1,745 | 1,503 |
| உப மொத்தம் | 8,700 | 8,496 | 204 | 11,065 | 8,147 | 2,918 |
| மூலதனச் செலவினம் | 500 | 518 | (18) | 450 | 3,614 | (3,164) |
| மொத்தம் | 9,200 | 9,014 | 186 | 11,515 | 11,761 | (246) |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி**

2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|---|
| (அ) | பதவி நிலைத்தரங்கள் | 01 | 01 |
| (ஆ) | இரண்டாம் தரங்கள் | 02 | 02 |
| (இ) | ஆரம்ப தரங்கள் | 10 | 07 |
| (ஈ) | வேறு (அமைய /தற்காலிக) | - | 11 |
| | மொத்தம் | 13 | 21 |

### 2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

#### 2.5.1 செயற்பாடற்ற வளங்கள்

அரிசி மாவின் இணை உற்பத்திகளை பிரபல்யமடையச் செய்யும் செயற்திட்டமொன்று ஆரம்பிப்பதற்காக வடமத்திய மாகாண பிரதம அமைச்சிலிருந்து 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 541,000 பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாதிருந்தமையினால் அவ் உபகரணங்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

#### 2.5.2 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 908,050 ஆக இருந்ததுடன், 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 108,379 ஆக இருந்தது.

#### 2.5.3 அசைவுறாத நடைமுறைச் சொத்துக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட அசைவுறாது காணப்பட்ட நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 36,020 ஆக இருந்தது.

### 2.5.4 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீக பரிசோதனையின் மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 10,530,318 ஆக இருந்தது.

### 2.6 இனங்காணப்பட்ட நட்டங்களும் இழப்புக்களும்

2010 திசெம்பர் 15 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கத்தவர்களினால் எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் மீளக் கையளிக்கப்படாத ரூபா 38,697 பெறுமதியான 513 புத்தங்களினதும் நட்டங்களை அறவீடு செய்வதற்கு முறையான செயற்பாடுகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. சில புத்தங்கள் எடுத்துச் செல்லப்பட்டு 08 வருடங்களுக்கும் மேலான காலத்தினைக் கொண்டிருந்தது.

### 2.7 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்.

(i) ரம்போவ பிரதேச சபைக் காரியாலயத்தின் மேல்மாடியினை நிர்மாணிப்பதற்கான திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக திட்டமிடலாளர் ஒருவருக்கு ரூபா 10,800 ஆனது 2010 யூலை 02 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்ததுடன் சபையில் போதியளவான தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சேவையில் இருக்கின்ற போது இவ்வாறு வெளித்தரப்பினர்களுக்காக கட்டணம் செலுத்தியதற்குரிய அதிகார வழங்கல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டினுள் ரூபா 441,579 பெறுமதியான நிலுவை வருமானம், ஊழியர் கடன் மற்றும் சொத்துகள் என்பன திரண்ட நிதியத்திற்கு எதிராக கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

### 2.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 13.7 ஆம் பிரிவின் பிரகாரம் பதிற் கடமை கொடுப்பனவுகள் செலுத்துவதற்காக முறையான நியமனமொன்று அவசியமாக இருந்த போதிலும் அவ்வாறான முறையான நியமனக் கடிதம் இன்றி சபையின் செயலலாளருக்கு பதில்

கடமைச் சம்பளமாக 2010 சனவரி இலிருந்து திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக மாதாந்தம் ரூபா 5,007 படி ரூபா 60,084 செலுத்தப்பட்டிருந்தது.

## 2.9 செயலாற்றல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் பிரகாரம் பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தின் மக்களின் வசதிகள் நலன்புரி செயற்பாடுகள், சுகாதாரம், பாதைகள் மற்றும் பொது உபயோக சேவைகளுக்குரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக எதிர்வரும் ஆண்டுகளில் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கிய கூட்டுத்திட்டம் மற்றும் மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்படுவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.10 ஒப்பந்த நிருவாகம்

இக்டாட் அறிவித்தல் பிரசுரத்தின் SCA/1 ஆம் இலக்க ஒப்பந்த வேலைகள் நிபந்தனைக் கோவையின் 56 ஆவது பந்தியின் பிரகாரம் செய்யப்பட்ட வேலைகளுக்கான அளவிடைகள் பெறப்பட்டு அதனை அடிப்படையாகக் கொண்டு மாத்திரம் கொடுப்பனவு செய்ய முடியுமாயிருந்த போதிலும் அவ் அடிப்படையைக் கருத்திற் கொள்ளாமல் இயந்திர மணித்தியாலயத்தை அடிப்படையாகக் கொண்டு ஒப்பந்தகாரர் ஒருவருக்கு ரூபா 51,600 ஆனது மீளாய்வாண்டினுள் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கான இறுதி அளவிடை அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.11 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்